# ஸ்காட்லாந்தில் உங்கள் பணத்தை நிர்வகிக்க கற்றுக் கொள்ளுங்கள்

## நிதிசார் அறிவு செயல்திட்டம்

ஏப்ரல் 2011

FLP - Tamil

**எங்களுடைய நிதிசார் அறிவு செயல்திட்டம்**

HAPPY TO TRANSLATE

எங்களுடைய இலவச தகவல் அமர்வுகள், பயிலரங்குகள் மற்றும் பாடநிரல்கள் உங்களுடைய பணத்தை நிர்வகிப்பதற்கு, திட்டமிடுவதற்கு, மற்றும் நீங்கள் எதிர்காலத்திற்காக தயாராகுவதற்கும், அதோடு பணம் அல்லது கட்டணப் பட்டிகள் தொடர்பான எந்த பிரச்னைகள் உங்களுக்கு இருந்தாலும் அவற்றை எவ்வாறு தீர்ப்பது என்பதைக் கற்றுக்கொள்ளவதற்கான ஒரு வாய்ப்பை உங்களுக்கு அளிக்கின்றன. இச்சிற்றேடு எங்களுடைய பயிலரங்குகளில் கற்பிக்கப்படும் தலைப்புகளைக் வெளிக்கோடிட்டுக் காண்பிக்கின்றன். யார் கலந்துகொள்ளவேண்டும் என்பதையும் மேலும் எவ்வாறு ஒரு இடத்தை பதிவு செய்ய வேண்டும் என்பதையும் இது அடையாளம் காட்டுகிறது. மேலும் இது ஒவ்வொரு பயிலரங்கத்தைப் பற்றிய உபயோகமான தகவல்களை அளிக்கின்றது மற்றும் மேற்கொண்டு நிதியுதவியை எங்கு பெறலாம் என்பதையும் அழுந்தக் கூறுகின்றது. பயிலரங்கம் எவைகளைப் பற்றியது ?

**எங்களது பயிலரங்கம் கீழ்க்கண்டவைகளைப் பற்றிய விபரங்களை வழங்குகின்றது:**

- வங்கியில் மற்றும் சேமிப்பு,
- வரவு செலவு திட்டமிடல்,
- பணம் கடன் வாங்குதல்,
- பயன்பாட்டுக் கட்டணப் பட்டிகள்,
- காப்பீடு,
- பணிக்கு இடம்பெயர்தல்; மற்றும்
- உங்களுடைய சொந்த வியாபாரத்தை தொடங்குதல்

**யார் பயிலரங்குகளில் கலந்துகொள்ளலாம்?**

எங்களுடைய பயிலரங்கத்தில் யார் வேண்டுமானாலும் கலந்துகொள்ளலாம். ஆனால் அவை அகதி நிலைமையுடன் இருப்பவர்கள் அல்லது யு.கே-யில் தங்கியிருக்க விடுப்பு உள்ளவர்களுக்கு மிகமிக பொருத்தமானவையாகும். பயிலரங்குகள் ஆண்டுமுழுவதும் க்ளாஸ்கோ முழுவதும் வெவ்வேறு இடங்களில் வழக்கமாக நடத்தப்படுகின்றன. இதற்காக பயணச்செலவுகள் தரப்படுகின்றன மற்றும் கோரிக்கையின் பேரில் குழந்தைப் பாதுகாப்பும் உண்டு.

**நான் எவ்வாறு மேலும் அதிக விவரங்களைப் கண்டறிவது அல்லது அடுத்த பயிலரங்கத்திற்கு பதிவு செய்துகொள்வது?**

அடுத்த பயிலரங்கத்திற்கான விபரங்களைப் பெறுவதற்கு அல்லது இடத்தை முன்பதிவு செய்வதற்கு மின்னஞ்சல் செய்யவும்: financialworkshops@scottishrefugeecouncil.org.uk அல்லது எங்களது இணையதளத்தைப் பார்க்கவும்:

http://www.scottishrefugeecouncil.org.uk/how_we_can_help/i_have_refugee_status/leave_to_remain_in_the_uk/financial_literacy_project

கீழ்க்காணும் தகவல்கள் பயிலரங்குகளில் எடுக்கப்படும் தகவல்களைக் கோடிட்டுக் காட்டுகின்றன. மேலும் உங்களுடைய பணத்தை நிர்வகிக்க உதவுகின்ற பயனுள்ள குறிப்புகளையும் தகவல்களையும் அளிக்கின்றன.

**வங்கியியல் மற்றும் சேமிப்பு**

- பல்வேறு வகையான வங்கிக் கணக்குகள் உள்ளன மற்றும் ஒவ்வொன்றும் வெவ்வேறு தேர்வுரிமைகளையும் சிறப்பம்சங்களையும் கொண்டுள்ளன. கணக்கு ஒன்றைத் தொடங்குவது பற்றி மேலும் தகவல் அறிய ஸ்காட்லாந்து அகதிகள் மன்றத்தின் சிற்றேட்டான '**வங்கிக் கணக்கு ஒன்றைத் தொடங்குவது எப்படி**' என்பதைக் காண்க: http://www.scottishrefugeecouncil.org.uk/assets/0000/0188/How_to_open_a_bank_account_June_2010.pdf

- வங்கிக் கணக்குகளுக்கு மாற்றாக **பற்றுவரவுச் சங்கக் கணக்குகள் (கிரெடிட் யூனியன்)** உள்ளன. இவை வங்கிகளை ஒத்த வழிகளிலேயே இயக்குகின்றன மற்றும் உள்ளூரிலேயே நடத்தப்படுகின்றன. இவை முறையான நிதிச் சேவைகளோடு கூடுதலாக ஆலோசனை சேவைகளையும் அளிக்கின்றன.

- **தடத்தைப் பின்பற்றுங்கள்:** நீங்கள் ஒரு வங்கிக் கணக்கு அல்லது பற்றுவரவுச் சங்கக் கணக்கு தொடங்கி விட்டால், உங்களுடைய கணக்கினுள் வருகின்ற மற்றும் வெளியே போகின்ற பணத்தின் தடத்தைப் பின்பற்றுங்கள். உங்கள் கணக்கில் பணமின்றி போவதை அல்லது மிகைப்பற்று உண்டாகியிருப்பதற்காக வங்கி கட்டணத்தை பிடித்தம் செய்யாமல் இருப்பதை உறுதிசெய்து கொள்ள இது மிகவும் முக்கியமாகும்.

**கடன் வாங்குதல்**

- பணம் கடன் வாங்க வெவ்வேறு இடங்களும் வழிகளும் உள்ளன. கடன்கள், கடன் அட்டைகள், வாராந்திர பணம் செலுத்தும் கடைகள் மற்றும் மிகைப்பற்று போன்ற பல்வேறு வழிகளில் நீங்கள் பணத்தை கடனாக வாங்க இயலும். சில நேரங்களில் இது பொருட்களுக்கு பணம் செலுத்துவதற்காகவும் சில நேரங்களில் ரொக்கம் பெறுவதற்காகவும் இருக்கும்.

- மேற்கூறிய வழிகளில் கடன் பெறுவதற்கான விலை வேறுபட்டது. எனவே விதிமுறைகள் மற்றும் வரையறைகளைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமாகும்.

- வழக்கமாக நீங்கள் பணம் கடன் வாங்கும்பொழுது வட்டி செலுத்த வேண்டும். இது **வருடாந்திர சதவீகிதம் (APR)** என்று அழைக்கப்படுகிறது. பொதுவாக APR எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவு அதிகமாக நீங்கள் பணத் தொகையை திருப்பி செலுத்த வேண்டியிருக்கும்.

- உங்களுடைய **வரவு தர அளவீடு (கிரெடிட் ரேட்டிங்)** மோசமாக இருந்தால், உங்களால் கடன் வாங்க இயலாது. வரவு தர அளவீடு என்பது வங்கி போன்ற கடன் தருபவர்களுக்கு உங்களால் பணத்தை திருப்பிச் செலுத்தக் கூடிய தகுதி ஆகும். உங்களுடைய வரவு தர அளவீடு என்பது முகவரி வரலாறு, பணி நிலை, வருவாய் மற்றும் கட்டணப் பட்டி செலுத்திய வரலாறு ஆகிய பல காரணிகளால் நிர்ணயிக்கப்படுவதாகும்.

- நீங்கள் கடன் ஒன்றைப் பெற விண்ணப்பிப்பதற்கு தகுதி உடையவராகலாம். உங்களுக்கு தகுதி இருக்கக் கூடிய, கிடைக்கிற கடன்களில் சில பின்வருவனவற்றை உள்ளடக்கியன:
- **UKBA ஒருங்கிணைப்பு கடன்**

  UKBA ஒருங்கிணைப்பு கடன் என்பது உள்துறை அலுவலகத்திலிருந்து புதிய அகதிகளுக்கு உதவ வட்டியில்லாமல் கிடைக்கும் ஒரு கடனாகும். உள்துறை அலுவலகத்தின் இணையதளத்திலிருந்து மேலும் கண்டறியுங்கள்: http://www.ukba.homeoffice.gov.uk/aboutus/workingwithus/workingwithasylum/integration/integrationloan/.

- **நெருக்கடி காலக் கடன்**

  நெருக்கடி காலக் கடன் என்பது ஒரு அவசரநிலை அல்லது பேரிடர் சந்தர்ப்பத்தில் உங்களுடைய வீட்டை அமைக்க உதவுவதற்காக சமுதாய நிதியிலிருந்து கிடைக்கும் ஒரு தொகையாகும். **நீங்கள் பிற்காலத்தில் அதை திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும், ஆனால் அதன்பேரில் எந்த வட்டியும் ஏற்றப்படுவதில்லை.** இதன் பொருள் நீங்கள் வாங்கிய கடனை மட்டும் செலுத்துகிறீர்கள் என்பதாகும். தகுதிக்கான தேவைகள் மற்றும் எவ்வாறு விண்ணப்பிப்பது என்பது உள்பட நெருக்கடி காலக் கடன் பெறுவது குறித்து மேலும் விவரம் அறிய இந்த இணையதளத்தை பார்வையிடவும்: http://www.direct.gov.uk/en/MoneyTaxAndBenefits/BenefitsTaxCreditsAndOtherSupport/On_a_low_income/DG_10018856

**பயன்பாட்டுக் கட்டணப் பட்டிகள்**

- நீங்கள் அகதி நிலைமை அல்லது யு.கே-வில் தங்க விடுப்பு பெற்றுவிட்டீர்கள் என்றால், நீங்கள் சமையல், விளக்கு மற்றும் வீட்டை சூடுபடுத்துவதற்கான உங்களுடைய மின்சார மற்றும் எரிவாயு கட்டணப் பட்டிகளைச் செலுத்துவதற்கு பொறுப்பாவீர்கள். இந்தக் கட்டணப் பட்டிகள் மிகவும் செலவு வைப்பவையாகும் மற்றும் இதன் விலை ஆண்டு முழுவதும் மாறக்கூடியதாகும். ஆகையால் நீங்கள் மிக அதிகமாகவோ அல்லது மிகக் குறைவாகவோ தொகை செலுத்துவதில்லை என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு இந்தக் கட்டணங்களைக் கண்காணிக்க வேண்டும்.

- உங்கள் வீட்டில் ஒரு மீட்டர் இருக்க வேண்டும் மற்றும் நீங்கள் குடிபுகுந்த நாளில் மீட்டர் அளவு(களை) குறிப்பெடுக்க வேண்டும், பிறகு நீங்கள் எரிவாயு/ஃமின்சார நிறுவனத்திற்கு இத்தகவல்களுடன் தொலைபேசியில் அழைக்கலாம். உங்களுடைய மீட்டர் அளவை முறையாக எடுப்பது, நீங்கள் எவ்வளவு சக்தியை பயன்படுத்துகிறீர்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது, இது உங்களின் கட்டணப் பட்டியை நீங்கள் புரிந்து கொள்ள உதவுகிறது. உங்களுடைய எரிவாயு மற்றும் மின்சாரக் கட்டணப் பட்டிகள் பற்றி மேலும் ஆலோசனைகளை கன்ஸ்யூமர் ஃபோக்கஸ் ஸ்காட்லாந்து இணையதளத்தில் கண்டறியவும்: http://www.consumerfocus.org.uk/scotland/files/2010/11/Tenants-advice-leaflet2.pdf

- நீங்கள் உங்களுடைய எரிபொருளுக்காக பல வழிகளில் கட்டணம் செலுத்தலாம், உதாரணமாக, உங்களுடைய கட்டணப் பட்டியை அஞ்சலகத்தில் அல்லது வங்கியில் செலுத்துவது, அல்லது உங்களுடைய வங்கிக் கணக்கிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்தில் எடுத்துக் கொள்வதற்கான அனுமதியை நீங்கள் தருகிற ஒரு நேரடி பற்றாகும். நீங்கள் உங்களுடைய கட்டணப் பட்டிகளை சரிபார்ப்பதும் வீட்டிலுள்ள மீட்டரை படிப்பதும் மிகவும் முக்கியமாகும். நீங்கள் அதைச் செய்யாவிடில், உங்களது கட்டணப் பட்டிகளில் நீங்கள் கடனில் (நிலுவை) சிக்குவதை அது சுலபமாகிவிடும்.

- எரிசக்திக்கான விலைகள் பற்றி மேலும் ஸ்காட்லாந்து அகதிகள் மன்றத்தின் சிற்றேட்டான ***ஸ்காட்லாந்தில் உள்ள அகதிகளுக்கான ஒரு வீட்டு கையேடு – சக்திக்கான விலைகள்*** எமது இணையதளத்தில் கிடைக்கப் பெறுகிறது: http://www.scottishrefugeecouncil.org.uk/assets/0000/0215/L8_-_fuel_poverty18__Nov_2009.pdf

**காப்பீடு**

- வெவ்வேறு காப்பீட்டுத் திட்டங்கள் கிடைக்கப் பெறுகின்றன, உதாரணமாக, ஆயுள் காப்பீடு, தனியார் உடல்நலக் காப்பீடு, வீட்டுப்பொருட்கள் காப்பீடு. பணம்செலுத்துகை பாதுகாப்புக் காப்பீடு, மற்றும் கார் காப்பீடு.

- நீங்கள் ஒரு காரை ஓட்டினால், உங்களுக்கு குறைந்தபட்சம் மூன்றாம் நபர் காப்பீடாவது இருத்தல் **அவசியம்.** ஆனால் மற்ற பெரும்பாலான வகைகள் விருப்பத் தேர்வுக்குரியவை.

- சில சமயங்களில் உங்களுக்கு வீடு அளிப்பவர் வீட்டுப் பொருட்களுக்கான காப்பீட்டை குறைந்த விலையில் ஏற்பாடு செய்ய உங்களுக்கு உதவக் கூடும். உங்கள் வாழ்க்கையின் வெவ்வேறு கட்டங்களில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் எந்த வகையான காப்பீடு பொருத்தமானது என்று நீங்கள் கருத வேண்டியது முக்கியமாக இருக்கும்.

- நீங்கள் காப்பீட்டை நேரடியாக நிபுணர்கள் காப்பீட்டு கழகங்களிலிருந்து தொலைபேசி மூலமாகவோ அல்லது இணையதளத்தின் மூலமாகவோ வாங்கலாம். நீங்கள் காப்பீட்டை வங்கிகளிலிருந்தோ, முக்கிய பேரங்காடியிலிருந்தோ அல்லது மற்ற கடைகளிலிருந்தோ கூட வாங்கலாம். நீங்கள் மிகச்சிறந்த விலைக்காக கடைகடையாக செல்ல வேண்டியிருக்கும் மற்றும் விலைகளை http://www.gocompare.com/ போன்ற ஒப்பீட்டு இணையதளம் மூலமாக ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

**பணிக்கு இடம்பெயர்தல்**

- நீங்கள் பணிக்கு செல்லத் தொடங்கும் போது நீங்கள் அடைந்துவரும் ஆதாயங்கள் மாறக்கூடும். ஜாப் சென்ட்டர் ப்ளஸ் மற்றும் பிற உள்ளூர் பண ஆலோசனை முகமைகள் ஆகியவை நீங்கள் பணியில் பொருளாதார நிலைமையில் சிறப்பாக இருக்கிறீர்களா என்பது குறித்த அறிந்தளிக்கப்பட்ட முடிவுகளை நீங்கள் எடுக்க அனுமதிப்பதன் பொருட்டு, உங்களுக்காக **'பணிக் கணக்கீடுகளில் சாதகமான சூழ்நிலை'** ஐ செய்யலாம். அவர்கள் உங்களுக்கு என்னென்ன சலுகைகளுக்கு உரிமைகள் உண்டு என்பதை விளக்கக்கூடும். முழு நேரப் படிப்பிற்கு செல்வது உங்களுடைய சலுகைகளைப் பாதிக்கக் கூடும். சலுகைகள் பற்றிய தகவல்களை டைரக்டரி இணையதளத்தில் பெறவும்: http://www.direct.gov.uk/en/Diol1/DoItOnline/DoItOnlineByCategory/DG_172666

- நீங்கள் பணி செய்ய ஆரம்பிக்கும்பொழுது முறையானதொரு **சம்பளப்பட்டியலை** பெற்றுக் கொள்ள வேண்டும், அது நீங்கள் எவ்வளவு வருமான ஈட்டியுள்ளீர்கள் மற்றும் உங்களது மொத்த சம்பளத்திலிருந்து செய்யப்பட்டுள்ள பிடித்தங்களைக் காண்பிக்கும். வழக்கமாக நீங்கள் **வருமான வரி** மற்றும் **தேசியக் காப்பீட்டுத்** தொகையை செலுத்துவீர்கள்; இவற்றுக்காக நீங்கள் செலுத்தும் சரியான தொகை அந்த ஆண்டு நீங்கள் சம்பாதிக்க எதிர்பார்க்கும் தொகை அல்லது உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பணி இருக்குமானால் அவை மூலம் நீங்கள் சம்பாதிக்க எதிர்பாக்கும் தொகை உள்ளிட்ட எண்ணற்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பிடித்தங்கள் மற்றும் உங்களது பணத்தை நிர்வகிப்பது பற்றிய வீடியோவை BBC இணையதளத்தில் பார்த்து மேலும் அறிந்து கொள்ளவும்.: http://www.bbc.co.uk/raw/money/new_job/managing_while_you_work.shtml

**உங்களுடைய சொந்த வியாபாரத்தை தொடங்குதல்**

- நீங்கள் சுய தொழில் செய்பவராக ஆவதற்கு அல்லது உங்களுடைய சொந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு விரும்பினால், உங்களுக்கு எண்ணற்ற நிறுவனங்கள் இலவசமாக ஆலோசனை தருவதற்கு உள்ளன.
  - ஆரம்பப்பிதற்கான ஆலோசனை மற்றும் தகவல்களையும் தற்பொழுதுள்ள வியாபாரத்திற்கான தொடர்ந்த உதவியையும் பிசினஸ் கேட்வே தரக்கூடும்.
    மேலும் தகவல்களுக்கு இணையதளத்தைப் பார்க்கவும்: http://www.bgateway.com
  - HMRC (ஹெர் மெஜஸ்டிஸ் ரெவின்யூ மற்றும் கஸ்டம்ஸ்) –யும் கூட உங்களுக்கான வரி செலுத்துதல்களைக் கணக்கிட உதவிடும். HMRC இணையதளத்தை மேலும் தகவல்களுக்கு பார்க்கவும்: www.hmrc.gov.uk

**மேற்கொண்டு நிதிசார்ந்த ஆலோசனைகளை நான் எங்கு பெறுவது?**

இப்பயிற்சி வகுப்புகளைப் பற்றி அல்லது சம்பந்தப்பட்ட விவகாரங்கள் பற்றி மேலும் தகவல்கள் உங்களுக்குத் தேவைப்பட்டால், ஸ்காட்லாந்து அகதிகள் மன்றத்திலுள்ள பணியாளர் ஒருவருடன் மேலும் தகவல்களுக்காக.தொடர்பு கொள்ளவும்: Financialworkshops@scottishrefugeecouncil.org.uk அல்லது 0141 248 9799 என்ற எண்ணில் அழைக்கவும்.

இலவசமான நம்பத்தகுந்த மற்றும் பாரபட்சமற்ற சேவை GAIN (க்ளாஸ்கோவின் ஆலோசனை மற்றும் தகவல் நெட்வொர்க்) -யில் கிடைக்கிறது. உங்களுக்கு அருகாமையிலுள்ள ஒரு முகாமை பற்றிய விவரங்களுக்கு GAIN இணையதளத்தை www.gain4u.org.uk பார்க்கவும் அல்லது அவர்களுடைய தொலைபேசி உதவியிணைப்பை 0808 801 1011 என்ற எண்ணில் அழைக்கவும்.